# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

<u>சுற்றறிக்கை எண்:112</u> <u>தேதி:-01.07.2016</u>

## *ஆந்திர மாநிலம் இரண்டாக பிரிப்பு மற்றும் சில செய்திகள்*

அன்பார்ந்த தோழர்களே,

BSNLலிலும் ஆந்திர மாநிலம் இரண்டாக பிரிக்கப்பட்டு தெலுங்கானா மாநிலம் உருவாக்கப்பட்டுள்ளது. அரசியலாக இரண்டு மாநிலங்களாக பிரிந்த போது BSNL நிர்வாகம் நாம் பிரிக்க வேண்டிய அவசியம் இல்லை எனக் கூறியது. ஆனால் அரசியல் நெருக்கடிகள் காரணமாக நிர்வாகம் தற்போது இப்படி ஒரு முடிவை எடுத்துள்ளது. திரு அனந்தராம் தெலுங்கான தலைமைபொது மேலாளராகவும், திரு தாமோதர்ராவ் ஆந்திர மாநில தலைமை பொது மேலாளராகவும் நியமிக்கப்பட்டு உள்ளனர். அனைத்து விதங்களிலும் முன்னேற்றம் காண வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் புதிய தெலுங்கானா மாநில ஊழியர்களையும், நிர்வாகத்தையும் வாழ்த்துகிறது.

***01.07.2016 முதல் பஞ்சப்படி உயர்வு:-*** புள்ளி விவரக் கணக்குகளின் படி 01.07.2016 முதல் 2.4% பஞ்சப்படி உயர்ந்துள்ளது. 01.07.2016 முதல் மொத்தம் 114.8% பஞ்சப்படி கிடைக்கும்.

**NEPPயில் உள்ள முரண்பாடுகளை களை:-** 90%க்கும் மேற்பட்ட ஊழியர்கள் NEPPயில் பலன் அடைந்துள்ளனர். ஆனால் ஒரு பகுதி தொழிலாளர்களுக்கு NEPP அமுலாக்கத்தால் ஒரு சில பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளது. பதவி அடிப்படையிலான பதவி உயர்வுகளை NEPPயின் முதல் பதவி உயர்வாக கருதக்கூடாது, முதல் பதவி உயர்வில் Sr.TOAக்களுக்கு 7100 ஊதிய விகிதம் வழங்கப்பட வேண்டும், LDC யிலிருந்து TOAக்களாக மாறியதை முதல் பதவி உயர்வாக கொள்ளக் கூடாது, TTA மற்றும் DRIVERகளுக்கு வழங்கப்பட்ட ஊதிய விகித உயர்வை பதவி உயர்வாக எடுத்துக் கொள்ளக்கூடாது மற்றும் நேரடி நியமனம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கும் பாரபட்சமின்றி 4,7,8,8 ஆகிய ஆண்டுகள் இடைவெளியில் பதவி உயர்வுகள் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி மனித வள இயக்குனருக்கு 30.06.2016 அன்று BSNL ஊழியர் சங்கம் மீண்டும் ஒரு கடிதம் எழுதியுள்ளது.

**7ஆவது ஊதியக்குழு:-** தேசிய கூட்டு நடவடிக்கைக் குழுவின் அனைத்து கோரிக்கைகளையும் மத்திய அரசு நிராகரித்துள்ளதாக மத்திய அரசு ஊழியர் மகாசம்மேளனம் இன்று அதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது. இதுவரை இருந்த ஊதியக் குழுக்களிலேயே 7ஆவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் தான் மோசமானவை. ஏழைகளுக்கு உதவுவதாக கூறி ஆட்சிக்கு வந்த மோடி அரசாங்கம், கார்ப்பரேட் முதலாளிகளுக்கும், பன்னாட்டு கம்பெனிகளுக்கும் அளவில்லாத சலுகைகளை வழங்கிவிட்டு மத்திய அரசு ஊழியர் சங்கங்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்க மறுப்பது துரதிருஷ்டவசமானது. மத்திய அரசு ஊழியர்களின் கோரிக்கைகளுக்கும், போராட்டங்களுக்கும் BSNL ஊழியர் சங்கம் தனது ஆதரவினை தெரிவித்துள்ளது.

**JTO LICE தேர்வு முடிவுகள்:-** 29.06.2016 அன்று தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி Dy.GS BSNLEU மற்றும் தோழர் சுனில் கௌதம் Dy. GS, SNATTA, ஆகியோர் GM(Rectt.) திருமிகு அனிமா ராய் அவர்களை சந்தித்து JTO LICE தேர்வு முடிவுகள் அதீதமாக தாமதாமாவது தொடர்பாக விவாதித்தனர். நீதிமன்ற வழிகாட்டுதல்களை மீறாமல் தேர்வு முடிவுகளை உடனடியாக வெளியிடுவது தொடர்பான பல ஆலோசனைகளையும் அவர்கள் வழங்கியுள்ளனர். இது தொடர்பாக பரிசீலிப்பதாக GM(Rectt.) தெரிவித்துள்ளார்.

**பொதுத்துறை நிறுவன தொழிற்சங்கங்களின் கருத்தரங்கம்:-** 02.07.2016 அன்று பொதுத்துறை நிறுவன தொழிற்சங்கங்களின் கருத்தரங்கம் ஹைதராபாத்தில் நடைபெற உள்ளது. இந்த கருத்தரங்கில் செப்டம்பர் 2 வேலை நிறுத்தம் மற்றும் 01.01.2017 முதல் நடைபெற உள்ள ஊதிய மாற்றம் தொடர்பாக விவாதிக்கப்பட உள்ளது. நமது சங்கத்தின் சார்பில் பொது செயலாளர் தோழர் அபிமன்யு, உதவி பொது செயலாளர் தோழர் சம்பத் ராவ் மற்றும் உதவி தலைவர் தோழர் அசோகா பாபு ஆகியோர் கலந்துக் கொள்ள உள்ளனர்.

**டெலிகாம் டெக்னீசியன் தேர்வுகளுக்கான கல்வித்தகுதியை தளர்த்துக:-** ஒரு கட்ட தளர்வாக டெலிகாம் டெக்னீசியன் தேர்வுகளை எழுதுவதற்கான தகுதியை தளர்த்த வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றது. ஒரு பெரிய அளவிலான RM, Gr.D ஊழியர்கள் ஊதிய தேக்க நிலையை அடைந்துள்ளனர். பத்தாம் வகுப்பு கல்வித் தகுதி இல்லாத RM, Gr.D ஊழியர்களை டெலிகாம் டெக்னீசியன் தேர்வு எழுத அனுமதித்தால் அவர்களின் ஊதிய தேக்க நிலை பிரச்சனைக்கு தீர்வு காணமுடியும் என்பதோடு, கீழ்மட்ட ஊழியர்களின் கனவும் நிறைவேறும். இது தொடர்பாக மனித வள இயக்குனருக்கு BSNL ஊழியர் சங்கம் 29.06.2016 அன்று மீண்டும் ஒரு கடிதம் எழுதியுள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**